**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.44/2016**

**வா.சா. – 1 – நந்தினிதேவி**

**நாள். 06.08.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**5 மற்றும் 6ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஞானம்பாள் என்பவர் என் தாயார். அவர் என் தம்பி 4 ஆம் வாதியுடன் தான் வசித்து வருகிறார். இந்த வழக்கானது எந்த அடிப்படையில் போட்டுள்ளேன் என்றால் 1987ஆம் ஆண்டு அழகர் செட்டியார் மகன்கள் ஆறுமுகம் செட்டியார் மற்றும் சின்னான் செட்டியார் ஆகியோர் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி நான் வழக்கு போட்டுள்ளேன். சின்னான் செட்டியாருக்கு 5 குழந்தைகள். அதில் என் தகப்பனார் இளவழகன் சின்னான் செட்டியாரின் 2வது மகன் ஆவார். ராஜேந்திரன் (2ஆம் பிரதிவாதி) 5 மகன் ஆவார். அவர் 2023 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். இந்த விபரத்தை நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் வழக்கறிஞரிடம் சொன்னேன். 1987ஆம் ஆண்டிற்கு முன்பே சின்னான் செட்டியார் அவரது 2 மக்கள் இளவழகன் மற்றும் ராஜேந்திரன் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினையில் என் அப்பா இளவழகனுக்கு 7 ஏக்கர் 53 செண்ட் சொத்து அவரது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதை ஒப்புக்கொண்டு பாகம் பிரித்துக்கொண்டதால் சேர்க்கவில்லை. அவ்வாறு பாகம் பிரித்த பிறகு என் அப்பா போது குடும்பத்தை விட்டு வெளியேறிவிட்டார் என்றால் சரியல்ல. அந்த 7 ஏக்கர் 53 செண்டு சொத்தை என் தகப்பனார் இறந்த காலத்திலேயே விற்றுவிட்டார். 5, 6 பிரதிவாதிகள் 5 ஏக்கர் 99 செண்ட் நிலம் கிரையம் வாங்கியுள்ளார்கள். அந்த கிரையம் வாங்கிய நிலம் 1987ஆம் ஆண்டு சின்னான் செட்டியாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1987 ஆம் ஆண்டு பாகப்பிரிவினையில் சின்னான் செட்டியாருக்கு 1 ஏக்கர் 84 செண்டு நிலம் சர்வே எண். 1250/2 விலும், 90 செண்ட் நிலம் சர்வே எண். 838 விலும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சின்னான் செட்டியாருக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்தை விடவும் அதிகமான சொத்தை தான் 5, 6 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி சொத்தை பற்றி ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா என்றால் 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வில்லங்கம் போட்டு பார்த்தார் அப்போது தான் இந்த விபரம் தெரிய வந்தது. அவ்வாறு வில்லங்கம் எடுத்து பார்த்த 5 நாட்களில் என் அப்பா இறந்துவிட்டார்.

அதனால் எதுவும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு என் அப்பா 2014ஆம் ஆண்டு வில்லங்கச்சான்று வாங்கி பார்த்தார் என்பதை காண்பிக்க அதனை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா பொது குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்று விட்டார் என்றும், அதனால் பொது குடும்ப சொத்தில் பாகம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சின்னான் செட்டியார் ராஜேந்திரன் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ள விபரம் எங்களுக்கு 2014ஆம் ஆண்டு வில்லங்கச்சான்று வாங்கி பார்த்தபின்பு தான் தெரியும். சின்னான் செட்டியார் தனது பாகத்திற்கு கிடைத்த சொத்தை கொடைக்கானல் கனரா பேங்கில் அடமானம் வைத்த விபரம் எனக்கு தெரியாது. 2014ஆம் ஆண்டு நாங்கள் வாங்கிய வில்லங்கச்சான்றிதழில் அந்த அடமானம் காண்பிக்கப்பட்டிருந்தது. தாவா 1,2 இலக்க சொத்துக்களை 5,6 பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பொதுகுடும்பத்தை விட்டு பிரிந்து போனதால் தான் 1987ஆம் ஆண்டு பாகப்பிரிவினையை அவர் உயிரோடு இருந்த வரை ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா 1,2 இலக்க சொத்துக்களை 5,6 பிரதிவாதிகள் தான் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. நான் கூறுவது போல் பொதுகுடும்பம் எதுவும், இல்லை என்றும், என் அப்பாவிற்கோ எங்களுக்கோ தாவா சொத்துக்களில் உரிமை இல்லை என்றால் சரியல்ல. ராஜேந்திரன் அவருக்கு சின்னான் செட்டியார் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தான் விற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் மதிப்பு உயர்ந்துவிட்டாதால் 1 முதல் 4 பிரதிவாதிகள் என்னை துாண்டிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்ய வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் உரிய பிரதி பிரயோஜனத்திற்காக தொகை கொடுத்து கிரையம் வாங்கியுள்ளனார் என்றும், அதனால் தாவா 1,2 சொத்துக்களை பொறுத்து அவர்கள் தான் உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. அந்த 1,2 இலக்க சொத்துக்களில் எனக்கு பாகம் எதுவும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.08.06 17:17:33 +0530

Additional District Judge,

Dindigul.